## டெல்லி அணியா? - தமிழ்நாடு அணியா? என்று மோதிப் பார்க்கும் தேர்தல்:

# டெல்லி அணியை ஓட ஓட விரட்டி, தமிழ்நாடு அணி இந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றாக வேண்டும்!

### பொன்னேரி தொகுதி காங். வேட்பாளர் துரை சந்திரசேகருக்கு

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!





**பொன்னேரி,ஏப்.10–**

**திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், பொன்னேரி சட்டமன்றத் தொகுதியின், திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் துரை சந்திரசேகர் அவர்களுக்கு கை சின்னத்தில் வாக்குகள் சேகரித்து, பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``இன்றைக்கு நம் தலைவர் திரும்பத் திரும்பச் சொல்கிறார். இந்த சட்டமன்றத் தேர்தல், 'டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா?' என்று மோதிப் பார்க்கக்கூடிய தேர்தல். தமிழ்நாடு அணியான நாம் இந்த முறை வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும் " என்று குறிப்பிட்டார்**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

தொடர்ந்து 11 நாட்களாகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுப் பேசிக்கொண்டு இருப்பதனால் தொண்டை சரியில்லை. இருந்தாலும், உங்களையெல்லாம் சந்தித்து, இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் நம் வெற்றி வேட்பாளர், கைச் சின்னத்தில் போட்டியிடுகின்ற நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர், நம் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்கு, நீங்கள் வருகிற சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றியைத் தேடித்தர வேண்டும் என்று உங்களையெல்லாம் வேண்டி விரும்பி கேட்க வந்திருக்கிறேன்.

### கை சின்னத்தில் வாக்களியுங்கள்

கடந்த 11 நாட்களாக தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 50 சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று வாக்குச் சேகரித்து வந்திருக்கிறேன். நான் செல்லக்கூடிய அனைத்துத் தொகுதிகளிலும் நிச்சயம் நம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான கூட்டணி, நம் தலைவர் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறப் போவது உறுதி. மீண்டும் முதலமைச்சராக நம் கழகத் தலைவர் அவர்கள்தான் பொறுப்பேற்கப் போவது உறுதி. அதை இன்னும் அழுத்தமாக உறுதி செய்கின்ற வகையில், இந்த பொன்னேரித் தொகுதியில் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்கு, மீண்டும் கை சின்னத்தில் வாக்களித்து, நீங்கள் மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்குத்தான் நான் வந்திருக்கிறேன்.

சென்ற முறை அண்ணன் சந்திரசேகர் அவர்களுக்கு வாக்களித்து கிட்டத்தட்ட 10,000 வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்து நீங்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பி வைத்தீர்கள். இந்த முறை, குறைந்தது 25,000 வாக்குகள் வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும். சென்ற முறை அவரை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தீர்கள். எத்தனையோ திட்டங்கள் இந்தத் தொகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறார்.

### பொன்னேரி திட்டங்கள்

4,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் பழங்குடியினருக்குப் பழவேற்காடு கூட்டுறவு வங்கி மூலமாக 60 கோடி ரூபாய் கடனுதவி.

கொசஸ்தலை ஆற்றின் மேல் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம். பாதுகாப்புச் சுவர் அமைக்கின்ற பணி, மீஞ்சூர் ரயில்வே மேம்பாலப் பணிகள், சிறுவாபுரி சாலை விரிவாக்கப் பணிகள், பழவேற்காட்டில் வாய்க்கால் திட்டப் பணிகள், பழவேற்காடு காட்டுப்பள்ளி சாலை அமைக்கின்ற பணி, நான்கு புதிய மீன்பிடி இறங்குதளங்கள், பழவேற்காடு மீன் சந்தை மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆரணி பேருந்து நிலையம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் அமைக்கின்ற பணி இப்போது நடைபெற்று வருகிறது.

4 கோடியில் புதிய தாலுகா அலுவலகம், 25-க்கும் மேற்பட்ட புதிய ரேஷன் கடைகளைக் கொண்டு வந்திருக்கிறார் உங்களின் சட்டமன்ற உறுப்பினர். 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு டிஜிட்டல் நூலகம், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய மினி ஸ்டேடியம், மீஞ்சூர், பொன்னேரி, ஆரணி பகுதிகளில் மின் தகன வசதி, அலையாத்திக் காடுகள் வளர்ப்பு, பஞ்சட்டி, பூங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் புதிய சமுதாய நலக்கூடங்கள் திறந்து வைத்திருக்கிறார் உங்கள் சட்டமன்ற உறுப்பினர்.

இப்படிப் பல்வேறு திட்டங்களை இந்த பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்கு உங்களின் வெற்றி வேட்பாளர் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த உரிமையில் மீண்டும் அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள். சென்ற முறை 10,000 வாக்குகள் வித்தியாசம். இந்த முறை குறைந்தது 25,000 வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

### மீண்டும் ஒரு வாய்ப்பு

ஒரு சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற சட்டமன்றத் தேர்தலில் நம் தலைவர் சொன்ன திட்டங்கள், அவற்றையெல்லாம் செய்து காட்டியிருக்கிறோம். அந்த உரிமையோடு இன்றைக்கு மீண்டும் மக்களைச் சந்தித்து எங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்க வந்திருக்கிறோம்.

சென்ற முறை நாம் சொன்ன ஒரு முக்கியமான திட்டம் - மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துத் திட்டம். ஆட்சி அமைந்த உடனே நம் தலைவர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு விடியல் பயணத் திட்டம், கட்டணமில்லாத் திட்டம்.

ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகள் அத்தனை பேரும் காலையில் வந்த உடனே பசியோடு படிக்கக் கூடாது. அவர்களுக்கு முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

### கல்வி ஊக்கத் தொகை

புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று படிக்கப் போனாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகை மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இப்போது சமீபத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தையும் அறிவித்து ஒரே மாதத்தில் கொடுத்து முடித்திருக்கிறோம்.

சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது நாம் சொன்ன வாக்குறுதி - கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்திருக்கிறார்.

இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க-வும் பா.ஜ.க.-வும் முயற்சி செய்தார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000 ரூபாய், கோடைக்கால சிறப்பு நிதி 2,000 என மொத்தம் 5,000 ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் கொடுத்தார்.

இப்போது வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் இல்லை, உயர்த்தி 2,000 ரூபாய் தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம்

முதியோர் உதவித்தொகை 1,200 இல்லை 2,000 ஆக உயர்த்தித் தருவோம் என்று வாக்கு கொடுத்திருக்கிறோம்.

கல்வி ஊக்கத் தொகை 1,000 இல்லை 1,500 ஆக உயர்த்தித் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து வருடத்தில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு 10 லட்சம் பேருக்கு வீடு தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் இல்லை எட்டாம் வகுப்பு வரைக்கும் உயர்த்தித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஐந்து வருடத்தில் கல்லூரி படிக்கக்கூடிய அனைத்துக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் 35 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான வாக்குறுதி - ஒவ்வொரு மகளிருக்கும் நம் அரசு அமைந்த உடனே முதலமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார். அந்த கூப்பனை வைத்துக்கொண்டு அந்த மகளிர் அவர்கள் வீட்டிற்கு என்ன மின் சாதனப் பொருட்கள் தேவையோ அவர்களே முடிவு செய்து, அவர்கள் விருப்பப்படி அவர்களே வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லி விட்டார் நம் தலைவர்.

இதெல்லாம் நடக்கவேண்டும் என்றால், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்குக் கை சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

### பால்டாயில் பழனிசாமி

கூட்டத்தினர் - போட்டோ, போட்டோ போட்டோவா?

நானே மறந்தாலும், நீங்கள் விடமாட்டேங்கறீங்க.

நீங்க உசுப்பேத்திவிட்டு, கிள்ளி விட்டு போய்விடுகிறீர்கள்.

எடப்பாடி பழனிசாமி என்னை பயங்கரமாகத் திட்டுகிறார். உதயநிதிக்கு என்ன அனுபவம் இருக்கிறது என்கிறார். ஆமாம் எனக்கு எந்த அனுபவமும் கிடையாது, யார் காலிலும் விழுந்து பதவி வாங்கிய அனுபவம் எனக்குக் கிடையாது. மிகவும் ஆத்திரப்படுகிறார். `உதயநிதி இன்னும் சாகாமல் என் உயிரை வாங்குகிறான்' என்கிறார் எடப்பாடி பழனிசாமி. இன்னும் கெட்டவார்த்தையில் மட்டும்தான் திட்டவில்லை. வெகுவிரைவில் அதையும் செய்துவிடுவார்.

இப்போது சமீபத்தில் என்ன தெரியுமா சொல்கிறார்? 'பால்டாயில் குடித்துவிட்டுப் போகிறான், பால்டாயில் குடித்துவிட்டுப் போகிறான்' என்று பேசிக்கொண்டே இருக்கிறார்.

இனிமேல் அவர் பெயர் எடப்பாடி பழனிசாமி இல்லை, பால்டாயில் பழனிசாமி. ஏன் அப்படிச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. பால்டாயிலேயே பார்த்துக்கொண்டு இருக்கிறார், அவருக்கு குறி பால்டாயிலேயே இருக்கிறது.

எடப்பாடி பழனிசாமி அவர்களே நீங்கள் நல்ல உடல் நலத்தோடு, ஆரோக்கியத்தோடு பல வருடம் அ.தி.மு.க-வின் நிரந்தரப் பொதுச் செயலாளராக நீங்கள்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்களுக்கு வசதியாக இருக்கும்.

### டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா?

இப்போது என்னை விட்டுவிட்டார், தலைவரைப் பிடித்துக்கொண்டார். தலைவரைப் பற்றி அவதூறாகப் பேசிக்கொண்டு இருக்கிறார். தோல்வியைச் பார்ப்பவர்கள் எப்படி எல்லாம் பேசுவார்கள், பிதற்றுவார்கள் அல்லவா, அது மாதிரி பேசிக்கொண்டு இருக்கிறார். அதனால்தான் இன்றைக்கு நம் தலைவர் திருப்பித் திருப்பிச் சொல்கிறார். இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா? என்று மோதிப் பார்க்கக்கூடிய தேர்தல் இந்தத் தேர்தல். தமிழ்நாடு அணி நாம் இந்த முறை வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு டெல்லி அணியை ஓட ஓட விரட்ட வேண்டும்.

மோடியையும் அவரின் அடிமைக் கூட்டத்தையும் விரட்ட வேண்டும் என்றால், இங்கே நம் வெற்றி வேட்பாளர், அன்னை சோனியா காந்தி அவர்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர், சகோதரர் ராகுல் காந்தியின் நன்மதிப்பைப் பெற்ற வேட்பாளர், நம் தலைவரின் அன்பைப் பெற்ற வேட்பாளர் அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களுக்குக் கைச் சின்னத்தில் வாக்களித்து, மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். கை சின்னத்தில் வாக்களித்து அண்ணன் துரை சந்திரசேகர் அவர்களை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து சட்டப்பேரவைக்கு அனுப்புங்கள்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி! என்று தெரிவித்தார்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ரமேஷ் ராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், மாவட்ட அவைத்தலைவர் பகலவன், துணைச் செயலாளர்கள் ரவி, கதிரவன், உமா மகேஸ்வரி, பொருளாளர் ரமேஷ், ஒன்றிய நகரப் பேரூர் கழகச் செயலாளர்கள் உதயசூரியன், முரளிதரன், ஜெகதீசன், ராஜா, செல்வசேகரன், ஆனந்த்குமார், ரவிக்குமார், தமிழ் உதயன், முத்து, இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், துணை அமைப்பாளர்கள் மோகன் பாபு, சங்கர், யுவராஜ், கதிரவன், பிரதாப், தில்லைக்குமார், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மய்யம், எஸ்.டி.பி.ஐ, தமிழ்ப் புலிகள் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற மகளிர் சுய உதவி குழுக்களின் ஆண்டு விழாவில் திருமதி துர்கா ஸ்டாலின், நடிகை நளினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன், தொகுதி பார்வையாளர் இரா.விடுதலை, பகுதி கழகச் செயலாளர் ஐ சி எப்.வ. முரளிதரன், எ.நாகராஜன் எம் சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.சந்துரு, சி.மகேஷ் குமார், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், அமுதா பொன்னிவளவன் எம் சி, எம்.தாவுத் பீ. எம் சி, யோக பிரியா தனசேகர் எம் சி, சி.ஸ்ரீ தனி எம் சி, மற்றும் 700–க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழுக்களைச் சார்ந்த பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் க.சுந்தர் காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியம் தம்மனூர் ஊராட்சியில் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் க.குமணன், ஊராட்சி மன்ற தலைவர் டி.எல்.தயாளன், கெங்கன் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.